# மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

**ந.க.எண்: 81 /2008 அ** **நாள்:09.08.2010**

ஈரோடு மாவட்டம் , கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சியில் கீழ்க்கண்ட வேலைகளை செய்து முடிப்பதற்கு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களிடமிருந்து மூடிமுத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்படுகின்றன.

மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சியின் சார்பாக அதன் செயல்அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் 25.8.2010 தேதி புதன்கிழமை 3.00மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளப்படும். ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிட்ட உறைகளில் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும் டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும். வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் 25.08.2010அன்று 3.30 மணிக்கு பேரூராட்சியின் செயல்அலுவலர் அல்லது அவரது அங்கீகாரம் பெற்றவரால் நேரில் ஆஜராகியுள்ள ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறந்து பரிசீலனை செய்யப்படும். வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி படிவங்களை 24.08.2010–ம்தேதி செவ்வாய்கிழமை மாலை 3.00மணி வரை வேலைக்கு எதிரில் குறிப்பிட்டுள்ளபடி ஒப்பந்தப்புள்ளி படிவங்களின் கிரயம் மற்றும் விற்பனைவரியையும் செலுத்தி ஒப்பந்தப்புள்ளி படிவங்களை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கண்ட தொகை திரும்ப வழங்கப்படமாட்டாது. ஒப்பந்த ஆவணங்கள், ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள் ஒவ்வொரு வேலைக்கும் செலுத்த வேண்டிய தொகை, ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டால் செலுத்த வேண்டிய காப்புத்தொகை, சால்வன்சித்தொகை மற்றும் இதர விபரங்களை இவ்வலுவலகத்தில் வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் கேட்டு தெரிந்து கொள்ளலாம். பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை எவ்வித காரணமும் கூறாமல் ஏற்றுக்கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ பேரூராட்சி மன்றத்திற்கு அதிகாரம் உண்டு. மேலும் **http://www.tenders.tn.gov.in** மற்றும் **http://townpanchayats.tn.gov.in/tender** என்ற இணையதள முகவரியிலும் ஒப்பந்தப்புள்ளி படிவத்தை இறக்கம் செய்து அனுப்பலாம்.

## வேலையின் விபரம்

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீடு | செலுத்தப்பட வேண்டிய டெபாசிட் தொகை | ஷெட்யூல் படிவ கிரயம் | வேலைகள் செய்து முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 1 | **பொதுநிதி வேலைகள் 2009–10**<br>திருவேங்கிடம்பாளையத்தில் 60000லி கொள்ளளவு கொண்ட சம்ப் கட்டி சாக்கடை நீரை வெளியேற்றுதல் | 12,40,000 | 24800 | 6240 | **120** நாட்கள் |
| 2 | காஞ்சிக்கோவில் மெயின் ரோட்டில் வடிகால் அமைத்தல் | 6,60,000 | 13200 | 1560 | **120** நாட்கள் |

## ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகள்

1) ஒப்பந்தக்காரர்கள் இப்பேரூராட்சியின் பதிவுபெற்ற ஒப்பந்தக்காரர்களாக இருக்க வேண்டும். மற்றும் இதர துறைகளில் ஒப்பந்ததாரராக இருந்து அவர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்தால் ஒப்பந்ததாரராக உடன் பேரூராட்சியில் உரிய ஆவணங்களைக் கொடுத்து பதிவு செய்ய வேண்டும்.

2) ஒவ்வொரு வேலைக்கும் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத் தொகை செலுத்திய ரசீது இணைக்கப் படாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறிப்பிட்ட நேரத்திற்குப் பிறகு கொடுக்கப்படும் ஒப்பந்தப்புள்ளி–களும், எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

3) செலுத்தப்படும் டேவணித் தொகைக்கு எவ்வித வட்டியும் வழங்கப்பட மாட்டாது. டேவணித் தொகை ரொக்கமாகவோ, கேட்பு வரைவோலையாகவோ செலுத்தலாம்.

4) ஒப்பந்தப்புள்ளிகளை மூடி முத்திரையிடப்பட்ட உறைக்குள் வைத்து உறையின் மீது எந்த வேலைக்குரிய ஒப்பந்தப்புள்ளி என்றும், டெண்டர் தேதி மற்றும் நேர விபரங்களுடன் தெளிவாக எழுதி செயல் அலுவலர் கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி என்ற முகவரியிட்டு, கொடுக்க வேண்டும். உறையில் ஒப்பந்தக்காரரின் முழு அஞ்சல் முகவரி இருக்க வேண்டும்.

5) பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஏதேனும் ஒன்றையோ அல்லது அனைத்து ஒப்பந்தப்புள்ளி–களையோ எவ்வித காரணம் கூறாமல் ஏற்றுக் கொள்ளப்படவோ அல்லது நிராகரிக்கவோ பேரூராட்சி மன்றத்திற்கு அதிகாரம் உண்டு.

6) ஒப்பந்தக்காரர் தம்மால் அளிக்கப்பட்ட டெண்டரை எவ்வித காரணமும் இல்லாமல் விளக்கிக் கொண்டால் (டெண்டரை ஏற்றுக் கொள்பவர் முடிவு செய்ய வேண்டும்) அவரால் பின்னர் அளிக்கும் டெண்டர்களை எவ்வித காரணமும் இன்றி நிராகரிக்க நேரிடும்.

7) வரப்பெற்று முடிவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளுக்கு பேரூராட்சி மன்றத்தில் அங்கீகாரம் பெற்ற பின்னரே வேலை உத்திரவு வழங்கப்படும்.

8) ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக் கொள்ளப்பட்டு வேலை உத்திரவு பிறப்பிக்கப்பட்ட மூன்று தினங்களுக்குள் அதற்குரிய படிவத்தில் ரூ. 20/– மதிப்புள்ள முத்திரைத் தாளில் உடன்படிக்கை எழுதித் தர வேண்டும். உடன்படிக்கை படிவத்தினை ரூ. 1/– கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி பெற்றுக் கொள்ள வேண்டும்.

9) வேலை உத்திரவில் குறிப்பிட்டுள்ள கால அளவிற்குள் வேலையை முழுமையாக முடித்துக் கொடுக்க வேண்டும். இல்லையேல் வேலையை ரத்துச் செய்யவும், அபராதம் விதிக்கவும் செயல் அலுவலருக்கு அதிகாரம் உண்டு. இதனால் ஏற்படும் எல்லா இழப்புக்கும் ஒப்பந்தக் காரர்களே பொறுப்பாவார்கள்.

10) ஒப்பந்தப்புள்ளி கொடுத்த பின்பு பின்வாங்கும் ஒப்பந்தக்காரர்களின் டேவணித் தொகையும் மேலே கண்டுள்ள 9 பத்தியில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை சரிவர நிறைவேற்றாத ஒப்பந்தக்காரரில் வைப்புத் தொகைகளும் எவ்வித அறிவிப்பும் இன்றி பறிமுதல் செய்யப்படும்.

11) குறிப்பிட்ட தேதிக்குள் வேலையை ஆரம்பிக்காவிட்டால் ஒப்பந்தக்காரர் அவ்வேலைக்கென செலுத்தப்பட்ட டேவணித் தொகையை பறிமுதல் செய்ததாகக் கருதப்பட்டு, பேரூராட்சியின் நிதியில் சேர்க்கப்படுவதுடன் அவ்வேலைக்கு மீண்டும் வேறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு வேலை செய்து முடிப்பதில் ஏற்படும் அனைத்து இழப்புகளுக்கும், முந்தைய ஒப்பந்தக்காரரே

13) ஒப்பந்தக்காரர்களே சிமெண்ட் வாங்கிக் கொள்ள வேண்டும். இதன் பொருட்டு, வேலைகள் பாதிக்கப்படக்கூடாது. இதற்கு சம்மதம் அளிக்கும் நபர்கள் மட்டுமே டெண்டர் கொடுக்க வேண்டும். சிமெண்ட் மற்றும் தார்க்கு தரச்சான்று,வேலை முடித்ததற்கான பட்டியலுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

14) கட்டுமான வேலைக்கென சேகரம் செய்யப்படும் பொருள்கள் பொறியாளரால் நிராகரிக்கப்பட்டால்,
ஏழு தினங்களுக்குள் அப்பொருட்களை அப்புறப்படுத்திக் கொள்வதுடன், பொறியாளரால் ஏற்றுக்
கொள்ளப்படும் வகையில் தரம் வாய்ந்த மாற்றுப் பொருட்களை வேலை நடக்கும் இடத்தில், ஒப்பந்தக்காரர் சேகரித்தல் வேண்டும். தவறினால் நிராகரிக்கப்பட்ட பொருட்கள், பேரூராட்சிப்
பொருட்களாக கருதி அப்புறப்படுத்தப்படும்.

15) யாருடைய டெண்டர் ஏற்றுக் கொள்ளப்படவில்லையோ அவரால் செலுத்திய டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பிக் கொடுக்கப்படும்.

16) வேலையை முடித்த பின்னர் பட்டியல் கீழ்க்காணும் தொகைகள் கழித்துக் கொள்ளப்பட்டு, மீதித் தொகையை மட்டும் பட்டுவாடா செய்யப்படும்.

| | | |
|---|---|---|
| அ) கூடுதல் காப்புத் தொகை | () | 3 % |
| ஆ) வருமானவரி | () | 2 % |
| இ) வருமான வரி மேல்வரி | () | 10 % |
| ஈ) விற்பனை வரி | () | 2 % |
| உ) விற்பனை வரி மேல்வரி | () | 10 % |
| ஊ) கல்வி வரி | () | 3 % |
| எ) நிறுத்தி வைக்கப்படும் டேவணி | () | 2 % |
| ஏ) கட்டுமான தொழிலாளர் சந்தா | () | 0.3 % |

17) தொடர்புடைய வேலைகளுக்கான பட்டியல் தணிக்கை செய்யப்பட்டு தணிக்கைத் தடை ஏதும் இல்லையென முடிவு தெரிந்த பின்னர்தான் அவ்வேலைகளுக்கான ஒப்பந்தக்காரரால் செலுத்தப்பட்ட டேவணித் தொகை விண்ணப்பத்தின் பேரில் திருப்பித் தரப்படும்.

18). வேலைகள் சம்பந்தமான அரசினரால் வெளியிடப்படும் உத்திரவுகளுக்கு உட்பட்டு ஒப்பந்தக்காரர்கள் வேலைகள் செய்ய வேண்டும்.

19). ஒப்பந்ததாரருக்கு ஒப்படைக்கும் பணி குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்கப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் துறை நடவடிக்கையான அபராதம் மற்றும் ஒப்பந்தம் ரத்து செய்வதை ஒப்பந்ததாரரால் தவிர்க்கப்படல் வேண்டும்.

செயல்அலுவலர்
கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி

<u>பெறுநர்:</u>

பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், கருமாண்டிசெல்லிபாளையம் பேரூராட்சி.
(அஞ்சலிட்ட சான்று மூலம்)

<u>நகல்:–</u>

1. மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள், ஈரோடு மாவட்டம் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
2. பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அவர்கள், ஈரோடு அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
3. உதவி செயற் பொறியாளர் அவர்கள், பேரூராட்சிகள் பிரிவு, பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அலுவலகம், ஈரோடு.
4. தொகுதி உதவிப் பொறியாளர் அவர்கள், பெருந்துறை பேரூராட்சி,
5. செயல் அலுவலர்கள், பேரூராட்சி, குன்னத்தூர், ஊத்துக்குளி, காஞ்சிக்கோவில், சென்னிமலை அலுவலக விளம்பரம் பலகையில் விளம்பரம் செய்ய.
6. ஆணையாளர் அவர்கள், ஊராட்சி ஒன்றியம், பெருந்துறை, சென்னிமலை, ஊத்துக்குளி அலுவலக விளம்பரம் பலகையில் விளம்பரம் செய்ய.
7. அலுவலக விளம்பரப் பலகைக்கு.
8. தலைவர் அவர்கள் மேஜைக்கு.